# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், “இதோ! கடவுளின் செம்மறி! செம்மறியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்; ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப் பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன்; தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகிறேன்” என்றார். (1:29-31)

# மறைந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தலைமைப்பணியின் நினைவலைகள்



2005ஆம் ஆண்டு ஏப்ரல் 19ம் தேதியிலிருந்து 2013ஆம் ஆண்டு பிப்ரவரி 28ம் தேதி வரை கத்தோலிக்கத் திருஅவையில் தலைமைப் பணியை ஆற்றிய முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், அவர் 2013ஆம் ஆண்டில் தனது தலைமைப்பணியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தபோது உலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியவர். ஏனெனில் கத்தோலிக்க திருஅவை வரலாற்றில் 600 வருடங்களுக்குப் பின் பதவி ஓய்வு பெற விழைவதாக அறிவித்த ஒரே திருத்தந்தை இவராவார். இவரது சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பை கீழ்க்காணும் அட்டவணையில் காண்போம்.

### வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு: 16-04-1927
குருத்துவ அருள்பொழிவு : 29-06-1951
ஆயராக அருள்பொழிவு: 28-05-1977
கர்தினலாக நியமனம்: 27-06-1977
265-வது திருத்தந்தையாகத் தேர்வு 19-04-2005
திருத்தந்தை பொறுப்பிலிருந்து ஓய்வு: 28-02-2013
இறப்பு: 31-12-2022

டிசம்பர் 31, இச்சனிக்கிழமையன்று இறைபதம் சேர்ந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் கத்தோலிக்கத் திருஅவையில் மறைக்கல்வியின் தந்தை என்று போற்றப்பெறுகிறார். இந்த நம் காலத்தில் கத்தோலிக்க கோட்பாடுகளின் இரத்தின சுருக்கமாக அமைந்துள்ள 1992 ஆம் ஆண்டில் வெளிவந்த கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏட்டில் இத்திருத்தந்தையின் பங்கு அளப்பரியது என்றால் மிகையாகாது. ஆம், கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏடு, (Catechism of the Catholic Church) மறைந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் விட்டுச்சென்றுள்ள மிகப்பெரும் மரபுரிமைகளில் ஒன்று என்று கருதப் படுகிறது.




1986ஆம் ஆண்டில் திருத்தந்தை புனித 2ம் ஜோன் பவுல் அவர்கள், உலக ஆயர்கள் மாமன்றத்தின் விண்ணப்பத்தைக் கருத்தில் கொண்டு மறைக்கல்வி ஏடு தயாரிக்கும் பொறுப்பை கர்தினால் இராட்சிங்கரிடம் (திருத்தந்தை 16-ம் பெனடிக்கட்) கொடுத்தார். இதனைத் தொடர்ந்து கர்தினால் இராட்சிங்கரின் தலைமையில் 12 கர்தினால்கள் மற்றும் ஆயர்கள் கொண்ட அவை உருவாக்கியதுதான் கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏடு, எனவே, இந்த மறைக்கல்வி நூல் மறைந்த திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அவர்களின் அயரா உழைப்பின் பயன் என்றால் மிகையாகாது.

ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் தலைமைப் பணியில் 24 வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணங்களை இவர் மேற்கொண்டுள்ளார், மூன்று உலக இளையோர் நாள் நிகழ்வுகளிலும், குடும்பங்களின் உலக நிகழ்வு ஒன்றிலும் இவர் பங்குபெற்றார் என்பது மற்றுமொரு வரலாற்று சிறப்பாகும். இவரது பணிக்காலத்தில், ‘அன்பே கடவுள் (caritas est), ‘எதிர்நோக்கினால் மீட்கப்பட்டோம் (Spe Salvi) மற்றும் ‘உண்மையில் அன்பு’ (Caritas in veritate) ஆகிய மூன்று திருமடல்களை எழுதியுள்ளார். அத்தோடு, இரண்டு சாதாரண உலக ஆயர்கள் மாமன்றங்கள், மற்றும் 2 சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றங்களை இவர் நடத்தியுள்ளார். 84 பேரை கர்தினால்களாக அறிவித்துள்ளார். 45 பேரை புனிதர்களாகவும், திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் உட்பட 855 பேரை அருளாளர்களாகவும் இவர் அறிவித்துள்ளார். உலகில் கடவுள் மீதுள்ள நம்பிக்கை ஏறத்தாழ மடியும் நிலையில் உள்ளது என்று கூறி, மக்களின் வாழ்வில் கடவுள் மையத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக அதிகம் முயற்சித்தார் இவர் என்று வத்திக்கான் தெரிவிக்கிறது.

‘திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் மனத்தாழ்மையும் கண்ணியமும் நிறைந்தவர்’
Shaykh Yahya Pallavicini.

## இறைத்தூதனின் பொங்கல் வாழ்த்து

**தைமாசம் பொறக்கையிலே**
**மனசெல்லாம் நெறஞ்சிருக்கு!**
**மங்களம் பொங்கட்டும்**
**மனக்கவலை தீரட்டும்!**
**மலையகம் தழைக்கட்டும்**
**மாந்தர் நலம் பெருகட்டும்!**
**பொங்கலோ பொங்கல்**




## ஈப்போ, புனித லூர்து அன்னை பங்கில் இயேசுவின் எளிய பிறப்பை நினைவூட்டும் குடில்

**ஈப்போ:** இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கில் “அஞ்சாதீர்கள்! இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்” (லூக் 2:10) என்ற குரலொலி அன்று கேட்டது. ஆம், ஈராண்டுக்கு மேலாக நமது இயல்பு வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கொரானா 19 தொற்று சற்று தணிந்துள்ள இவ்வேளையில் ஆண்டவரின் தூதர் அன்று இடையர் களுக்குக் கூறிய அந்த பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியை நினைவு கூரும் வகையில் இப்பங்கில் இயேசுவின் எளிய பிறப்பு குடில் அமைக்கப்பட்டது.

கிறிஸ்மஸ் அலங்கரிப்பில் முக்கிய இடம் வகிப்பது இயேசுவின் பிறப்பு குடில்தான். ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு புனித பிரான்சிஸ் அசிசி இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததை நினைவூட்டும் வகையில் இல்லத்தில் குடில் அமைக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார் என்பது வரலாறு.

நாம் ஏழ்மையில் வாடினாலும் செல்வத்தில் சிறந்தாலும் ஆண்டவராகிய மெசியாவின் பிறப்பு நமக்கு மகிழ்ச்சியையும் நற்செய்தி அறிவித்தலுக்கான ஆற்றலையும் தருகிறது என்பதை இந்த எளிய கிறிஸ்மஸ் குடில் கற்றுத் தருவதாகப் பங்கு மக்களுக்கு இந்த குடில் வழி உணர்த்தப்பட்டது.





# ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ பொங்கல் நன்றியின், நம்பிக்கையின் திருநாள்

‘செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே’ என்ற மகாகவி பாரதியாரின் பாடலுக்கேற்ப உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் இணைந்து கொண்டாடக் கூடிய ஒரு விழாவாகத் திகழ்கிறது பொங்கல் திருநாள். பொங்கல் கொண்டாடும் அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் இறைத்தூதன் சார்பாக இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்வதில் மகிழ்கிறோம்.

பொங்கல் உண்மையில்:

- உழவரின் உழைப்புக்கு உயிர் தரும் விழாவாகவும்
- எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையின் பெருவிழாவாகவும்
- நம்முடைய முன்னோர்களின் அற்புத மான மத சார்பற்ற விழாவாகவும்,
- நல்விளைச்சல் தந்த கடவுளுக்கு நன்றி விழாவாகவும் இன்று கொண்டாடப் படுகிறது.

திருஅவையில் 1962-ம் ஆண்டு தொடங்கிய கலாச்சாரமயமாக்குதல் எனும் திருஅவை யின் கொள்கையின் படி உழைக்கும் தமிழர் தமது உழைப்பிற்கு உதவிய கடவுளுக்கும், உழைத்த கால்நடை களுக்கும் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டது இந்த பொங்கல் திருநாள். நான்கு நாள் கொண்டாடக் கூடிய இந்த பண்டிகை நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இரு முத்தான காரியங்களை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது.

### 1. தூய்மையின் திருநாள்

பழையன கழிதலும் புதியன புகுதலும் இந்த பொங்கல் கொண்டாட்டத்திற்கு இன்றிய மையாதவை. வீட்டில் தேங்கி கிடக்கும் குப்பைகள், தேவையற்ற பொருள்கள் போன்றவற்றை தீயில் இட்டு கொழுத்தி வீட்டிற்கு வண்ணம் பூசி புதுப்பொழிவு பெறவேண்டிய நாள் இந்த முதல் நாள். வீடு மட்டுமல்ல வீட்டில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பது தான் இதன் முக்கிய தத்துவமாக விளங்குகின்றது. இங்கே, வெளித்தோற்றத் தைவிட நம்முடைய உள்ளத்தில் புதைத்து வைத்திருக்கக் கூடிய தீய எண்ணங்களை குப்பைகளை அகற்றி, உலகத்தில் உள்ள எல்லோரையும் சகோதர சகோதரிகளாக ஏற்க நம்மை அழைக்கின்ற நாள் இதுவாகும்.

### 2. நம்பிக்கையின் திருநாள்



தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம், தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம், ஆடியிலே வெதை வெதச்சோம் தங்கமே தங்கம், ஐப்பசியில் களையெடுத்தோம் தங்கமே தங்கம், கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம், கழனியெல்லாம் பொன்னாச்சு தங்கமே என்ற பாடல் வரிகள் மனிதனுக்குள்ளே நம்பிக்கையை தூண்டுகின்றது. தை முதல் நாள், புதிய நாள் மனித வாழ்க்கையில் ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

தை மாதத்தின் முதல் நாளான இன்று நிலத்திலிருந்து கிடைத்த புதிய அரிசியை புது பானையில் இட்டு பொங்கல் செய்து அதை இனிமையான கரும்பு வாழைப்பழம் போன்றவைகளோடு நம் அன்பு உள்ளங்களுக்கு இன்முகத் தோடு பகிருகின்றபோது ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஏற்படக்கூடிய நம்பிக்கை பொங்கலைப் போல பொங்கி வழிய வேண்டும்.

இந்த உலகத்தின் மிகப்பெரிய நம்பிக்கை உழவு அதைச் செய்கின்ற உழவர்கள். இவர்கள் தங்களது அயராத உழைப் பினாலும் அர்ப்பணத்தினாலும் இந்த உலகத்திற்கு உணவு கொடுக்கின்றார்கள். இவர்கள் நமக்கான உணவை உறுதிப்படுத்துவதனால்தான் நாம் நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் நன்றாக உறங்கி கண்விழிக்கின்றோம். எனவே, இந்த உழவர்களோடு இணைந்து அவர்களின் மகிழச்சியில் பங்கெடுப்பது மனிதநேயப் பண்பாகும்.

**அடுத்த வாரம் (22-1-2023) பொதுக்காலத்தின் 3-ம் ஞாயிறு திருஅவை ‘இறைவார்த்தை ஞாயிறு ‘ தினத்தைக் கொண்டாடுகிறது!**

# கோலாலம்பூர், பாத்திமா அன்னை பங்கின் வைரவிழா கொண்டாட்டம்

## அன்னை மரியாவோடு அவரது மகனை நோக்கிய பயணம்

மலேசியாவின் தலைநகராகிய கோலாலம் பூரில், பிரிக்பீல்ஸ் எனும் இடத்தில் 1963-ல் எழுப்பப்பட்ட புனித பாத்திமா அன்னை ஆலயம் இவ்வாண்டு அதன் 60-ம் ஆண்டு நிறைவு வைரவிழாவைக் கொண்டாடு கிறது.

பல்லின மக்கள் வாழும் இப்பகுதியில் நாட்டின் ஒற்றுமைக்கு அடையாளமாக அனைவரது வழிபாட்டுத் தளங்களையும் உள்ளடக்கிய பிரிக்பீல்ஸ் மலேசியர்களின் ஒற்றுமைக்கு ஓர் அடையாளம் எனலாம்.

இங்கே, முன்னதாக 1903-ம் ஆண்டு கட்டப்பட்ட செபமாலை அன்னை பங்கு கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தேவைகளுக்கு மையமாக இருந்து வந்ததது. ஆனாலும், காலவோட்டத்தில் வளர்ச்சிகண்டு வந்த பங்சார், பழைய கிள்ளான் சாலை, இங்கு அமைந்திருந்த புறம்போக்கு குடிசை பகுதிகள், பந்தாய் டாலாம் மற்றும தெற்கே உள்ள பூச்சோங் ஆகிய வட்டாரங்களில் வசித்த கத்தோலிக்க மக்களின் வழிபாட்டுத் தேவைக்கு ஓர் இடம் தேவைப்பட்டதாக உணரப்பட்ட சூழலில், புனித பாத்திமா தேவாலயம் கட்ட அன்றைய மறைந்த பேராயர் தோமினிக் வேந்தர்கோன் அனுமதி வழங்கினார் என்பது வரலாறு. இவ்வாறாக, 1963-ல் கட்டி முடிக்கப்பட்ட தேவாலயத்தை பேராயர் தோமினிக் வேந்தர்கோன் ஆசீர்வதித்து அதிகாரப் பூர்வமாகத் திறந்து வைத்தார்.



தொடக்கத்தில் அருள்தந்தை சுவாமிநாதன் சவேரி என்பவர் பங்குத்தந்தையாக நியமனம் பெற்றார். அவரைத் தொடர்ந்து மறைந்த அருள்தந்தை பீட்டர் பிரித்தவ்டியூ மற்றும் ஜீன் மேரி குஷ்ரோன் போன்ற பிரான்ஸ் நாட்டு அமல உற்பவி அன்னை மறைத்தூது சபை (Missionary Oblates of Mary Immaculate -OMI) குருக்கள் இங்கே பங்குத் தந்தைகளாக அமர்த்தப்




பட்டனர். அடுத்து உள்நாட்டு அருள் பணியாளர்கள் அருள்தந்தையர்கள் அ.அமலநாதன், ஜோன் ஞானபிரகாசம் மற்றும் பேரருட்தந்தை டேனியல் லிம் ஆகியோர் பொறுப்பில் இப்பங்கு வளர்ச்சி கண்டது.

நான் அறிந்த வகையில் 1975-ம் ஆண்டு களில் தமிழ் அப்போஸ்தலர் பணிக் குழுவும் முதன்முதலில் அமைக்கப்பட்டது. அதன் தலைவராக நான் நியமிக் கப்பட்டிருந்தேன். பின்னர் அங்கு முழுநேர மறைபோதகராக இருந்த சகோ. இக்னேசியஸ் தலைமையில் வெள்ளிக் கிழமைகள் தோறும் தமிழில் விவிலிய வகுப்பும் தொடங்கப்பட்டது. 1978-ம் ஆண்டில் இப்பங்கில்தான் முதன்முதலில் பொங்கல் திருப்பலி கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறாக கடந்த 60 ஆண்டு காலமாக இப்பகுதியில் உள்ள ஆங்கிலம் மற்றும் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களுக்கு அவர்களின் ஆன்மீக, அருட்சாதன தேவைகளைப் பூர்த்தி செய்யும் மையமாக அந்த ஆலயம் சிறப்புற்றிருக்கிறது என்றால் மிகையாகது.

இப்பங்கு ஈன்றெடுத்த அருள்தந்தையர் களாக மறைந்த அருள்தந்தை பெனடிக்ட் சவரிமுத்து(1968), ‘யூஜின் பெனடிக்ட் (1989), பெட்ரிக் பூட்வில் (1994), பெர்டினன் மகிமை (1996) மற்றும் கிறிஸ்தபர் வில்வராஜ் (1996) ஆகியோர் அருள்பொழிவு செய்யப்பட்டனர்.

இன்றைய பங்குத்தந்தை வில்லியம் மைக்கல் அவர்களின் தலைமையில் இப்பங்கின் வைரவிழாக் கொண்டாட்டம் தொடங்கப்பட்டள்ளது மற்றொரு சிறப்பாகும்.

-ஆர்.கே.

# கடவுளின் செம்மறியே நமதாண்டவர்

இன்றைய பொதுக் காலத்தின் 2ம் ஞாயிறு வாசகங்கள், யாவரும் தூயோராக்கப்பட்ட இறைமக்களாக வேண்டும் என்பதைச் சிந்திக்க நம்மை அழைக்கிறது. அதோடு இயேசு கிறிஸ்து நமது மீட்புக்காக பிறந்தார், பாடுபட்டார், இறந்தார் என்பதை அறிக்கையிட வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறது.

பாபிலோனியாவுக்குக் கடத்திச் செல்லப் பட்ட இஸ்ராயேல் மக்களை தாயகத்திற்கு அழைத்து வர ஆண்டவரின் ஊழியனின் வரவை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. “கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார்” (49:5) என எசாயா இறைவாக்கினர் கூறுகிறார். திருச்சட்டத் தையும் கட்டளையையும் மீறிய மக்களைத் தூயோராக்க ஊழியனைத் தயாரிக்கிறார், ஆண்டவர்.

“இதோ வருகின்றேன்” (திபா.40:7-8) உமது திருவுளம் நிறைவேற்ற என இன்றைய திருப்பாடல் பதில் மொழியாக அமைகிறது. ஆண்டவருக்கு நிகரானவர் எவரும் இல்லை; அவர் மீது நம்பிக்கை வைக்கிறேன். அவரது பேரன்பையும் உண்மையையும் அறிவிப்பேன் என உறுதிக் கொண்டு ஊழியன் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால், இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப் பெற்றுத் தூயோராக்கப்பட்டு இறைமக்களாக மாறுவோம் என இரண்டாம் வாசகத்தில் (1கொரி.1:1-3) திருத்தூதர் புனித பவுல் உறுதியளிக்கிறார்.

நற்செய்தியில், பாவத்தைப் போக்கும் ஆட்டுக் குட்டியை அடையாளம் காட்டு கிறார் திருமுழுக்கு யோவான். “இவரே இறைமகன்” (யோவா.1:34) என்று அவர் கைகாட்டுகிறார். பாவம் போக்கும் “கடவுளின் ஆட்டுக்குட்டி” எனவும் “இறைமகன்” எனவும் இயேசுவை அடையாளம் காட்டும் திருமுழுக்கு யோவான், உலகின் பாவத்தைப் போக்க பலியாகும் ஆட்டுக்குட்டி இவரே எனச் சுட்டிக்காட்டுகிறார்.

திருச்சட்டத்தையும் கட்டளையையும் மீறுவதே பாவம் என நாம் எண்ணுகிறோம். உண்மைதான். சட்டத்திற்கு எதிராக நடப்பது, செயல்படுவது குற்றம், பாவம். மோசமான செயலைப் புரியும் எவரும் பாவம் செய்கின்றோம். அதுபோலவே, கடவுளின் திருச்சட்டத்தை மீறும் போது பாவம் செய்கிறோம். திருச்சட்டம் அன்பை வலியுறுத்துகிறது.

அன்பு காட்ட தவறுவது பாவம். அன்பு செலுத்தத் தவறுவது பாவம். ஏனெனில் அன்பே கடவுள்; கடவுள் அன்பாய் இருக்கிறார் (1யோவா 4:8, 16). பாவத்தால், பிறரின் மனம் மட்டுமல்ல கடவுளின் மனமும் உடைந்து போகிறது. அன்புக்கு விரோதமானதே பாவம். அந்த மாபெரும் அன்பின் ஆழத்தையும் நீளத்தையும் அகலத்தையும் சிலுவையில் காட்டி நம்மை மீட்டார், அவரே உலகின் பாவம் போக்கும் ஆட்டுக்குட்டி. அவரே உண்மை ஊழியன். ஆண்டவரின் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? (எசா.49:6). உண்மை ஊழியனாக இருக்கும் வழியைக் காட்டியுள்ளார், இயேசு. பாலகனாக மாட்டுக் குடிலில் பிறந்த போது, அவரது பிறப்பை அறிந்து வந்து வணங்கிய இடையர்களே, முதல் நற்செய்தியாளர்கள். அந்த இடையர்களே மீட்பரின் பிறப்புச் செய்தியைப் பிறருக்கு முதலில் அறிவித்தவர்கள் (லூக்.2:17-18). சாதாரண, கடைக்கோடி மக்களை நற்செய்தியை அறிவிப்பவர்களாக இறைவன் தேர்வு செய்திருக்கும் போது, ஆண்டவரின் ஊழியனாக செயல்பட நாம் யாவருக்கும் தகுதி உண்டு. எனவே, துணிந்து நம்பிக்கைக்குரியவர்களாய் செயல்படுங்கள் (1கொரி.4:2) எனும் சவுல் அடிகளின் அழைப்பை ஏற்று வாழ்வோம்.

அந்தோணி இன்னாசி
ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்

**பொதுக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசா 49: 3. 5-6 |
| தி. பாடல்: | 40: 1,3ab. 6-7a. 7b-8. 9 |
| 2ம் வாசகம்: | 1 கொரி 1:1-13 |
| நற்செய்தி: | யோவா 1: 29-34 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**